Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12

அரிய பழைய பாடல்கள்..
..புதிய இசையில்




ACD

Produced by:
Kennedy Ministries
A-4, Deju Plaza, No.2, South Avenue
Srinagar Colony, Saidapet, Chennai - 600 015
T: +91 44 22353500, 9940667881, 9940350460
E: kennedy@kennedyministries.org W: www.kennedyministries.org
facebook.com/kennedyministries

music mindss
M.R.P. ₹ 75/- in Tamilnadu. ₹ 85/- in Other States in India.

எல்லா கிறிஸ்தவ புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்!



ஜெப தேவைக்கும்
தேவ ஆலோசனைக்கும்

+ 91 - 44 - 22353500 + 91 - 9940667881
www.kennedyministries.org
E-mail: nijakennedy@yahoo.com

Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# இனி எக்காளம்

VOL. 5 ISSUE. 9
தனிப்பிரதி ரூ 20/- ஏப்ரல் 2012



இரத்தம்போல்

# கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற..



## நிஜா கென்னடி

**தாவீதை என் இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டேன்; எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான் என்று அவனைக் குறித்து சாட்சியுங் கொடுத்தார்** (அப்போஸ்தலர் 13:22). தாவீதை கர்த்தருக்கு பிடித்திருந்தது. என்னென்ன செய்ய வேண்டும் என்று கர்த்தர் நினைக்கிறாரோ, அவற்றையெல்லாம் தாவீது செய்வான் என்று தாவீதைக்குறித்து கர்த்தர் கூறுகிறார். தாவீது கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவனாக, அவருடைய விருப்பத்தை அறிந்து அதன்படி நடக்கிறவனாக இருந்தான்.

தாவீது தேவனோடுகூட ஐக்கியமாய் இருந்தான். அதனால்தான் எதைச் செய்தாலும் அதை கர்த்தரிடம் கேட்டு செய்கிறான். கர்த்தரின் ஆளுகைக்குள் கட்டுப்பட்டு இருந்தான். அவன் முழு இஸ்ரவேல் தேசத்திற்கும், ராஜாவாயிருந்தான். சகல அதிகாரமும் அவனுடைய கரத்தில் இருந்தது. அவன் எதை விரும்புகிறானோ அதையெல்லாம் செய்யலாம். ஆனால் அவன் தன் சுயவிருப்பத்தின்படி காரியங்களைச் செய்யாமல், கர்த்தரிடம் கேட்டு அவருடைய விருப்பத்தின்படி எல்லாவற்றையும் செய்தான்.

நம் வாழ்க்கையிலும் அதிகாரம் கையில் இருந்தால், நாம் நம் மனது விரும்புகிறதையெல்லாம் செய்யக்கூடாது. மேலான அதிகாரத்தில் இருப்பவர்கள், தலைவர்கள், அலுவலகம் மற்றும் ஸ்தாபன முதல்வர்கள், குடும்பத் தலைவர்கள், பணம் படைத்தவர்கள் மற்றும் அதிகாரம் கையில் இருப்பவர்கள், தங்களுக்கு அதிகாரம் இருப்பதால் அந்த அதிகாரத்தை தவறாகவும், தேவனுடைய சித்தத்திற்கு எதிராகவும், தேவனுக்கு விரோதமான செயல்களைச் செய்யவும் பயன்படுத்தக் கூடாது. தேவனுடைய விருப்பத்தை அறிந்து, அவருடைய சித்தத்தையே செய்பவர்களாக இருக்கவேண்டும். தேவனுடைய சித்தத்தின் மையத்தில் தான் மெய்யான ஆசீர்வாதம் உண்டு. அதில் சமாதானம் இருக்கும். வேதனை இருக்காது. நாமும் தாவீதைப்போல எப்பொழுதும் கர்த்தருடைய சித்தத்தை அறிந்து அதன்படி செய்பவர்களாய் இருப்போம். தேவ ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்வோம். தாவீது கர்த்தருடைய சித்தத்தின்படி எல்லாவற்றையும் செய்ததால், கர்த்தர் அவருடைய விருப்பத்தையெல்லாம் தாவீதை வைத்து செய்ய முடிந்தது.

தாவீது கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்கிறவனாய் இருந்தான். அவன் கர்த்தருக்கு ஒரு ஆலயத்தை கட்டவேண்டுமென்று வாஞ்சையோடு இருந்தான். கர்த்தர் தாவீதிடம் நீ அதை கட்ட வேண்டாம், உன்னுடைய மகன் என் நாமத்திற்கென்று ஆலயத்தைக் கட்டுவான் என்று கூறியபோது, உடனே அதற்கு கீழ்ப்படிந்தான். கர்த்தருடைய வாஞ்சையை நிறைவேற்றுகிறவனாய் இருந்தான் (2 சாமுவேல் 7:11,12). ஒவ்வொரு முறையும் யுத்தத்திற்கு போகும்போது கர்த்தரிடம் கேட்டு, அவருடைய வழிநடத்துதலின்படியே சென்றான். சிறிய காரியமானாலும், பெரிய காரியமானாலும் சரி, ஒவ்வொன்றிற்கும் கர்த்தருடைய சித்தத்தை அறிந்து அதன்படி செய்கிறவனாய் இருந்தான்.

கர்த்தர் தாவீது செய்த தவறுகளை தீர்க்கதரிசிகள் மூலமாக எடுத்துச் சொல்லி கண்டித்து உணர்த்தினபோது, கவனமாகக் கேட்டு அதற்கு கீழ்ப்படிந்தான். தான் செய்த தவறை உணர்ந்து, மனந்திரும்பி, மன்னிப்பை பெற்றுக் கொண்டான். தாழ்மையுள்ளவனாக, கற்றுக் கொள்ளுகிறவனாக இருந்தான். அவன் ஒரு சில தவறுகளைச் செய்திருந்தாலும், கர்த்தர் அவனை பாராட்டி, என் சித்தத்தை செய்கிறவன் என்று சாட்சி கொடுக்கிறார். ஆனால், சவுல் தான் செய்த தவறை உணர்ந்தபோது கர்த்தரிடமிருந்து மன்னிப்பை பெற்றுக் கொள்ளவேண்டும் என்கிற மனதில்லாமல் சாக்கு போக்கு சொல்லிக் கொண்டிருந்தான். இயேசு கிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத், குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டேன் (மத்தேயு 27:4) என்று வருந்தி நான்றுகொண்டு செத்தான். ஆனால், அவன் இயேசு கிறிஸ்துவிடம் மன்னிப்பைக் கேட்டிருந்தால் நிச்சயமாக அவனை மன்னித்திருப்பார். மன்னிப்பை பெற்றுக்கொள்ள வேண்டும் என்கிற மனப்பான்மை அவனுக்கு இல்லை.

பிரியமானவர்களே, நம் ஒவ்வொருவரையும் குறித்து கர்த்தர் எப்படியாக சாட்சி கொடுப்பார் என்று சிந்தித்து பார்ப்போம். நாம் அவருக்கு பிரியமான ஒரு வாழ்க்கை வாழுகிறோமா? தாவீதை கர்த்தர் என் இருதயத்திற்கேற்றவன் என்று கூறுகிறார். நம்மைக் குறித்து இப்படி சொல்லும்படியாக நம்முடைய வாழ்க்கை உள்ளதா? கர்த்தருடைய இருதயம் விரும்புகிறவற்றை நாமும் செய்யும்போது, நம்மைக் குறித்தும் எனக்கு பிரியமானவள்(ன்) என்று கூறுவார்.

## தாவீதின் கீழ்ப்படிதலும், தாழ்மையும்

வேதத்திலே தாவீது மட்டும்தான் கர்த்தருடைய இருதயத்திற்கேற்ற மனிதனாக இருந்தான். தேவனுக்கு விரோதமாக பாவங்களை செய்தான். உரியாவின் மனைவி பத்சேபாளிடம் விபச்சாரம் செய்தான். அதை மறைக்க பொய் பேசினான். உரியாவை கொலை செய்தான். கர்த்தர் நாத்தான் தீர்க்கதரிசியின் மூலமாக அவனிடம் பேசின போது, தான் செய்த தவறை உணர்ந்து, **நான் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தேன் என்றான்** (2 சாமுவேல் 12:13). உடனே தன்னை தாழ்த்தி,தன்னை சுத்திகரிக்கும்படியாய் கர்த்தரை நோக்கி ஜெபிக்கிறான். அதனால் கர்த்தர் அவனை மன்னித்தார்.

இன்னொருமுறை, தாவீது இஸ்ரவேல் ஜனங்களின் தொகையை கணக்கெடுக்கும்படி கட்டளையிட்டான். கர்த்தரிடம் கேட்காமலேயே சுயமாக இந்த காரியத்தை செய்தான். இது தேவனுடைய பார்வையில் பாவமாக இருந்தது. இதனால் தேவ கோபம் இஸ்ரவேல்மேல் வந்தது. எழுபதாயிரம் பேர் கொள்ளை நோயினால் மடிந்துபோனார்கள் (1 நாளாகமம் 21:14). **மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு; அதின் முடிவோ மரண வழிகள்** (நீதிமொழிகள் 21:2). நாம் சுயவழியில் நடக்கும்போது நம் வாழ்க்கையில் பல போராட்டங்கள், கஷ்டங்கள், இழப்புகள் வருகிறது. நாம் கர்த்தரோடு நெருங்கி, அவரை சார்ந்து வாழவேண்டும். தாவீது தான் எவ்வளவு பெரிய தேசத்தையும், படையையும் வைத்திருக்கிறேன் என்று பெருமிதம் கொண்டான். படையின் எண்ணிக்கை அவனை பெருமைப்பட வைத்தது. கர்த்தரை சார்ந்து இருக்காமல் படைபலத்தை நம்பினான். படைபலம் அல்ல, கர்த்தரே நம்மை பாதுகாக்க முடியும் என்பதை மறந்தான். என்ன நோக்கத்தோடு ஜனங்களை கணக்கிடச் சொன்னான் என்பதை கர்த்தர் அறிந்திருந்தார். அவனுடைய உள்நோக்கம் சரியில்லாதிருந்தது.

நாமும் பலவேளைகளில் பணம் தான் நம்மை பாதுகாக்க முடியும்; சொத்துக்கள், உடமைகள் நம் பாதுகாப்பு என்று நினைத்து கர்த்தரை நம்பாமல், பணத்தையும் ஆஸ்திகளையும் நம்புகிறோம். இவை நம்மை பெருமைகொள்ள வைத்து, சுய பெலத்திலே நிற்க வைக்கிறது. நம் இருதயத்தில் மறைந்திருக்கும் இரகசியமான பாவம் நமது செயல்களின் மூலமாக வெளிப்படும்.

**மனுஷனுடைய வழிகளெல்லாம் அவன் பார்வைக்குச் செம்மையாகத் தோன்றும்; கர்த்தரோ இருதயங்களை நிறுத்துப் பார்க்கிறார்** (நீதிமொழிகள் 21:2). நடந்து கொள்ளும் முறையை வைத்து ஒரு மனிதனை நியாயந்தீர்க்கிறோம். ஆனால், கர்த்தர் அவனுடைய நடத்தையை மட்டுமல்ல, இருதயத்தின் நோக்கங்களையும் ஆராய்ந்து அறிகிறார்.

கர்த்தர் தீர்க்கதரிசியாகிய காத்தின் மூலம் தாவீதை எச்சரித்தார். அவன் பாவ உணர்வடைந்து கர்த்தரிடம் இப்படியாக மன்னிப்பைக் கேட்டான்: **நான் இப்படிச் செய்ததினாலே பெரிய பாவஞ்செய்தேன்; இப்போதும் ஆண்டவரே, உமது அடியானின் அக்கிரமத்தை நீக்கிவிடும்; நான் மகா புத்தியீனமாய்ச் செய்தேன் என்றான்** (2 சாமுவேல் 24:10). தாவீது தான் செய்த தவறை உணர்ந்து, தன்னை தாழ்த்தி உடனே மன்னிப்பை பெற்றுக் கொண்டான். தனக்கும், கர்த்தருக்கும் உள்ள உறவை சரிபடுத்திக் கொண்டான். செய்த பாவத்தை மீண்டும் அவன் செய்யவில்லை. அதனால் அவன் கர்த்தருடைய இருதயத்திற்கு பிரியமானவனாக காணப்பட்டான். நாமும் கத்தருக்கு விரோதமாக என்ன பாவம் செய்திருந்தாலும் நம்மை தாழ்த்தி உடனே மன்னிப்பை பெற்றுக் கொள்வோம். மீண்டும் அதே பாவத்தை செய்யாதிருப்போம்.

## தேவசித்தம் அறிதல்

தாவீது எதையும் கர்த்தரிடத்தில் விசாரித்து செய்கிறவனாய் இருந்தான். பெலிஸ்தியர் கேகிலாவுக்கு எதிராக யுத்தம் பண்ணுகிறார்கள் என்று கேள்விப்பட்டான். உடனே தாவீது கர்த்தரிடம் பெலிஸ்தியரோடு யுத்தம் பண்ணப் போகலாமா என்று கேட்டான். கர்த்தர் அவனிடம் நீ போ பெலிஸ்தியரை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்றார். தாவீது கர்த்தருடைய வார்த்தையின்படி பெலிஸ்தியரை முறியடித்தான் (1 சாமுவேல் 23:2).

தாவீதும், அவனுடைய ஆட்களும் சிக்லாக்கிலே குடியிருந்தார்கள். தாவீதும் அவனோடிருந்தவர்களும், யுத்தத்திற்கு சென்றிருந்தபோது, அமலேக்கியர்கள் சிக்லாக்கை கொள்ளையடித்து அதை அக்கினியினால் சுட்டெரித்து, அங்கிருந்த ஜனங்களை சிறைப்பிடித்துக் கொண்டுபோய்விட்டார்கள். தாவீதும் அவனோடிருந்தவர்களும் திரும்பிவந்தபோது நடந்ததை அறிந்து கதறி அழுதனர். தாவீதோடு கூட இருந்தவர்கள், தங்கள் குடும்பத்தாரை இழந்து போனதால் தாவீதின்மேல் கோபம் கொண்டு கல்லெறியும்படி அவனுக்கு எதிராக வந்தார்கள். தாவீது மிகவும் நெருக்கப்பட்டான். கர்த்தருக்குள் அவன் தன்னை திடப்படுத்திக் கொண்டான். அந்த நெருக்கமான நேரத்திலும் அமலேக்கியரை பின் தொடரலாமா என்று கர்த்தரிடம் ஆலோசனை கேட்கிறான். கர்த்தர் அமலேக்கியரை பின் தொடரும்படி கூறினார். நாமும் தாவீதைப்போல கர்த்தரிடம் கேட்டு எல்லாவற்றையும் செய்ய வேண்டும்.

சவுல் மரித்தபின் தாவீது கர்த்தரிடம், நான் யூதாவின் பட்டணங்களில் போய் இருக்கலாமா என்று கேட்டான். கர்த்தர் போ என்று சொன்னவுடன், நான் எந்த இடத்திற்கு போகலாம் என்று கேட்டான், கர்த்தர் எப்ரோனுக்கு போ என்று கூறினார் (2 சாமுவேல் 2:1). தாவீது கர்த்தரோடு ஐக்கியமாய் இருந்ததால் தான் கர்த்தரிடம் விசாரித்து எல்லாவற்றையும் செய்தான்

எந்த காரியத்தைச் செய்தாலும், அதைச் செய்ய கர்த்தர் விரும்புவாரா? கர்த்தருக்கு பிரியமானதா? என்பதை நாம் யோசித்து பார்க்க வேண்டும். கர்த்தரை எப்பொழுதும் தாவீது தனக்கு முன்பாக வைத்திருந்

தான். நம்முடைய சிந்தனையெல்லாம், எப்படியெல்லாம் கர்த்தரை பிரியப் படுத்துவது என்பதாகவே இருக்க வேண்டும். அவர் விரும்பும் வாழ்க்கையை நாம் வாழவேண்டும். தாவீதைப்போல கர்த்தரை அதிகமாய் நேசிக்க வேண்டும். மனிதர்களை பிரியப்படுத்துகிறவர்களாய் அல்ல, கர்த்தரை பிரியப்படுத்துகிறவர்களாய், அவருடைய இருதயத்திற்கு ஏற்றவர்களாய் மாற வேண்டும். மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்ட நாம் தேவனுடைய பிள்ளைகளாய் மாறிவிடுகிறோம். நாம் தேவனுக்கு சொந்தமானவர்கள். நாம் சுயசித்தத்தை செய்கிறவர்களாய் அல்ல, தேவசித்தத்தை செய்கிறவர்களாய் மாறவேண்டும்.

தாவீது தன் சிறு வயதிலிருந்தே கர்த்தரை அதிகமாக நேசித்தான். கர்த்தரைப் பாடி துதிக்கிறவனாய் இருந்தான். இசைக் கருவியை நேர்த்தியாய் வாசித்து கர்த்தரை துதித்துப் பாடி ஆராதிக்கிறவனாய் இருந்தான். அவன் தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது ஒரு விசை ஒரு சிங்கமும், ஒரு விசை ஒரு கரடியும் வந்து மந்தையிலிருக்கிற ஒரு ஆட்டை பிடித்துக் கொண்டது. கர்த்தர் அவனோடுகூட இருந்ததால் தாவீது அவற்றைக் கொன்று ஆட்டை தப்புவித்தான். தாவீது கோலியாத்திடம், யுத்தம் கர்த்தருடையது, கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக் கொடுப்பார் என்று தைரியமாக, விசுவாசத்தோடுகூட பேசி, கர்த்தருடைய உதவியினாலே அவனைக் கொன்றுபோட்டான்.





**சவுலின் கீழ்ப்படியாமையும், பெருமையும்**

கர்த்தர் சவுலை இஸ்ரவேல் ஜனங்களை ஆளும்படியாக தெரிந்தெடுத்தார். சாமுவேல் தீர்க்கதரிசியைக் கொண்டு அவனை ராஜாவாக அபிஷேகம் பண்ணினார். சவுல் ராஜாவாகிறதற்கு முன் தன் தகப்பனாருக்கு கீழ்ப்படிந்திருந்தான். தன் வேலைக்காரனின் ஆலோசனையைக் கேட்கும் மனதையுடையவனாக, தாழ்மையுள்ளவனாக இருந்தான். கர்த்தருடைய தீர்க்கதரிசியை மதிக்கிறவனாய், அவனுக்கு காணிக்கை கொடுக்கும் மனப்பான்மையுள்ளவனாய் இருந்தான். அவன் ராஜாவான ஒரு சில ஆண்டுகளுக்குள் கீழ்ப்படியாதவனாய், பெருமையுள்ளவனாய் மாறினான்.

இஸ்ரவேலுக்கு எதிராக பெலிஸ்தியர்கள் யுத்தம் பண்ணக் கூடினார்கள். ஜனங்களெல்லாரும் பயந்து ஒளிந்தார்கள். சவுலை விட்டு ஜனங்கள் சிதறிப் போனார்கள். யுத்தத்திற்கு செல்வதற்கு முன்னால் கர்த்தருக்கு தகனபலியை செலுத்த சவுல் விரும்பினான். பலி செலுத்த சாமுவேல் தீர்க்கதரிசி வரவேண்டும். அவன் வர காலதாமதம் ஆனபோது, சவுல் சாமுவேலுக்காக காத்திராமல், ஆசாரியர்கள் மூலமாக செலுத்த வேண்டிய பலியை துணிந்து தானே செலுத்தினான். கர்த்தருடைய வார்த்தைக்கு அவன் கீழ்ப்படியவில்லை. கர்த்தர் அவனை ராஜாவாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டார். சவுல், சாமுவேலிடம் பெலிஸ்தியர் யுத்தம் பண்ண வந்துவிடுவார்கள் என்றும், ஜனங்கள் என்னைவிட்டு போய்விடுவார்கள் என்றும், நீங்களும் சரியான நேரத்தில் வரவில்லை அதனால் பலி செலுத்தினேன் என்றும் சாக்குபோக்கு கூறினான்.

சவுல் கீழ்ப்படியாமல் இருந்து, கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தான். கர்த்தருக்கும் அவனுக்கும் நெருங்கிய உறவில்லாதிருந்தது. தான் செய்த பாவத்தை உணர்ந்து மனந்திரும்பவில்லை.

நாமும் முக்கியமான முடிவுகளை எடுக்கும்போது, பொறுமையை இழந்து கீழ்ப்படியாமல் இருந்துவிடக்கூடாது. நாம் செய்த தவறுகளையும், பாவங்களையும், ஒத்துக்கொள்ளாமல் சாக்குபோக்குகளைச் சொல்லி நம்மை நியாயப்படுத்துகிறோம். கர்த்தர் நம் உள்நோக்கத்தை அறிவார். நாம் செய்த பாவங்களை உண்மையாய் அறிக்கை செய்யும்போது மன்னித்து விடுகிறார். நம்மை ஆசீர்வதிக்கிறார்.

கர்த்தர் சவுலிடம் அமலேக்கியரையும், அவர்களுக்கு உண்டான எல்லாவற்றையும் அழிக்கும்படி சாமுவேல் தீர்க்கதரிசி மூலமாக கூறினார். சவுல் அமலேக்கியரை முறியடித்தான். கர்த்தரின் வார்த்தைக்கு முழுமையாக கீழ்ப்படியாமல், அமலேக்கியரின் ராஜாவை உயிரோடே பிடித்தான். ஆடுமாடுகளில் முதல் தரமானவற்றை அழித்துப்போட மனதில்லாமல், பலி செலுத்த உயிரோடே வைத்திருந்தான். கர்த்தர்தான் தனக்கு வெற்றியைக் கொடுத்தார் என்று கர்த்தரை மகிமைப்படுத்தாமல், தன்னை பெருமைப்படுத்த ஒரு நினைவு கல்லை நாட்டினான். சவுல், சாமுவேலிடம், கர்த்தருடைய கட்டளைகளை நிறைவேற்றினேன் என்று பொய் சொன்னான் (1 சாமுவேல் 15:13).

அமலேக்கியரை முறியடித்ததால் தனக்கு வெற்றி கிடைத்தது என்று சவுல் நினைத்தான். ஆனால், தேவனுடைய பார்வையில் பெரிய தோல்வியாயிருந்தது. ஏனென்றால் அவன் கர்த்தருடைய வார்த்தையை முழுமையாய் நிறைவேற்றவில்லை. உண்மையில்லாதவனாய் இருந்தான். தான் செய்த தவறுக்காக மனம் வருந்தவில்லை. தேவனை உண்மையாய் நேசிக்கவில்லை. கர்த்தர் சொன்னதை அவன் செய்யாததால் கர்த்தர் அவனை ராஜாவாக்கினதற்காக வருந்தினார் *(1 சாமுவேல் 15:11)*.

கர்த்தருடைய இருதய விருப்பத்தை சவுல் நிறைவேற்றவில்லை. அவன் தன் சுயவிருப்பப்படி செய்தான். கர்த்தரை மதிக்காமல், அசட்டைபண்ணினான். தேவகட்டளையை மீறி தேவனை அவமதித்தான். கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

கர்த்தருக்கு காணிக்கை கொடுப்பதைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலே முக்கியம். கர்த்தரை உண்மையாய் நேசிக்காமல், வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் காணிக்கை கொடுப்பது, சடங்காச்சாரமாய் இருக்கிறது, கீழ்ப்படிய மறுப்பது பில்லி சூனியத்திற்கு இணையான பாவம். தனது திட்டங்களை அல்லது முடிவுகளை மாற்றிக் கொள்ள மறுக்கிற (பிடிவாதமுடைய), தான் செய்யவேண்டும் என்று மற்றவர்கள் விரும்புவதைச் செய்ய விரும்பாத குணம் (தற்பெருமை) விக்கிரகங்களை தொழுதுகொள்ளுவதற்கு சமம் *(1 சாமுவேல் 15:22,23)*. சவுல் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாததாலும், பெருமை கொண்டதாலும், கர்த்தர் அவனை ராஜாவாயிராதபடி புறக்கணித்து தள்ளினார்.

அவன் சாமுவேலிடம் என்னோடு கூட கர்த்தரை பணிந்து கொள்ள வாரும் என்று வருந்தி அழைத்தான். ஏனென்றால் இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்பாகவும், தலைவர்களுக்கு முன்பாகவும் தனக்கு மரியாதை கொடுக்கும்படி அழைத்தான் *(1 சாமுவேல் 15:30)*. சவுல் ஜனங்களுக்கு முன்பாக மதிப்பாக இருக்க விரும்பினான். மற்ற மனிதர்கள் தன்னைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்று நினைத்தானேயொழிய தன்னை தாழ்த்தி கர்த்தரிடம் மன்னிப்பை பெற்றுக் கொண்டு கர்த்தரோடு நல்ல உறவில் இருக்க வேண்டும் என்ற அக்கரையில்லாதிருந்தான். இவன் தேவனால் வரும் பாராட்டை விட மனிதனால் வரும் பாராட்டை விரும்பினான் *(1 யோவான் 12:43)*.

கர்த்தர் நம்மிடம் பேசும்போது, அதற்கு முழுமையாய் கீழ்ப்படிந்து நடக்க ஆயத்தமாயிருக்க வேண்டும். சவுலைப்போல அரைகுறையாக கீழ்ப்படியக்கூடாது. கர்த்தரிடமிருந்து வரும் வார்த்தையை புறக்கணிக்காமல் அதை புரிந்துகொண்டு அதன்படி நடக்க நம்மை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். கர்த்தருடைய இருதயத்தின் வாஞ்சையை நிறைவேற்றுகிறவர்களாக நாம் மாற வேண்டும். கர்த்தருடைய வார்த்தையின்படி சவுல் நடக்காததால், கர்த்தர் அவனை புறக்கணித்து, தாவீதை தெரிந்து





கொண்டார். கர்த்தர் வருங்காரியங்களை அறிந்து வைத்திருக்கிறார். தாவீது கர்த்தருக்கு பிரியமாய், அவர் விரும்புவதையே செய்கிறவனாய் இருப்பான் என்று கர்த்தர் அறிந்திருந்தார். அதனால் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த தாவீதை கர்த்தர் சாமுவேல் தீர்க்கதரிசியைக் கொண்டு அபிஷேகித்து தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும்படி தெரிந்து கொண்டார். கர்த்தர் அவனோடு கூட இருந்தார். நாமும் தாவீதைப்போல கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, அவருடைய சித்தத்தையே செய்பவர்களாய் இருக்க வேண்டும்.

### தேவ சித்தம்

நம்முடைய மனதின்படி மற்றும் உணர்ச்சிகளின்படி நடக்காமல், கர்த்தருடைய மனதின்படி, சித்தத்தின்படி நடப்பதற்காகவே நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்கிறோம். மனிதர்களாகிய நமக்கு வருங்காரியங்கள் தெரியாது. அது கர்த்தருக்கே தெரியும். நம்முடைய மனதின்படியும், சுயபுத்தியின்படியும், உணர்ச்சிகளின்படியும் நடக்கும்போது, அது நம்மை போராட்டத்தில், நெருக்கத்தில், சோர்வில், இழப்பில் கொண்டுபோய் விடலாம். இவற்றிலிருந்தெல்லாம் நம்மை தப்புவிக்க கர்த்தர் விரும்புகிறார். தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வது என்பது சிரமமான காரியம் அல்ல. கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆவியையும், வேதத்தையும் நமக்கு தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தும்படியே கொடுத்திருக்கிறார்.

இன்று அநேகர் நல்ல எண்ணங்களையும், செயல்களையும் தேவனுடைய சித்தமாக எண்ணுகிறார்கள், தேவனுடைய சித்தத்தை, பரிசுத்த ஆவியானவர் வேதத்தின் வார்த்தை மூலமாகவே வெளிப்படுத்துவார். சொப்பனங்கள், தரிசனங்கள் மற்றும் சூழ்நிலைகள் மூலமாக கர்த்தர், தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தினாலும், பரிசுத்த ஆவியானவர் அவற்றை வியாக்கியானம் (விவரித்து) செய்தாலே நமக்கு அது விளங்கும். பரிசுத்த ஆவியின் அபிஷேகமும், தேவனுடைய வார்த்தையும் இல்லாமல் தேவசித்தம் வெளிப்படாது. இதில் ஒன்றிருந்து மற்றொன்று இல்லாவிடினும் தேவசித்தம் வெளிப்படாது.

பழைய ஏற்பாட்டு காலத்தில் ஆசாரியனுக்கு ஊரீம், தும்மீம் மூலமாக கர்த்தர் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தினார். மேக ஸ்தம்பத்திலிருந்து கர்த்தர் பேசினார். அடையாளங்கள் மூலமாக தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தினார். மோசேயோடு முகமுகமாய் பேசி

தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தினார். ஏனோக்கோடும், நோவாவோடும் சஞ்சரித்தார். எலியா, எலிசா, ஏசாயா மற்றும் மற்ற தீர்க்கதரிசிகளோடு ஆவியாய் இருக்கிற தேவன் அவ்வப்போது அவர்கள்மேல் இறங்கி அவர்களோடு பேசினார். இது அவ்வப்போது நடந்த காரியம். அநேக நாட்களுக்கு தேவனுடைய தரிசனமோ, வார்த்தையோகூட இல்லாதிருந்தது. ஆனால், இப்பொழுது தேவன் பரிசுத்த ஆவியானவராக எப்பொழுதும் நமக்குள் தங்கியிருந்து, வேதத்தை கற்றுக் கொடுக்கிறார். அதன்மூலமாக தமது சித்தத்தை தொடர்ந்து வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இல்லாதவர்களும், இளம் விசுவாசிகளும் தம் சித்தத்தை அறிந்துகொள்ள கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களை தீர்க்கதரிசிகளாய் வைத்திருக்கிறார். வேதம் பொதுவான தேவசித்தத்தை வெளிப்படுத்தும். குறிப்பான தேவசித்தத்தை பரிசுத்த ஆவியானவரே வெளிப்படுத்துவார். இதுவும் வேத வசனத்தை அடிப்படையாக கொண்டிருக்கும்.

இரட்சிக்கப்படாதவர்களுக்கு, அவர்களுடைய மனசாட்சி இதைச் செய், அதைச் செய்யாதே, அது நல்லதல்ல என்று பகுத்துக் காண்பிக்கும். மனசாட்சியின்படி நடக்கும்போது, உண்மையாகவும், நேர்மையாகவும் இருக்கலாம். ஆனால், இதில் தேவனுடைய சித்தம் வெளிப்படாது. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றவர்களுடைய மனசாட்சி, பரிசுத்த ஆவியானவர் சொன்னதை செய்கிறார்களா? இல்லையா? என்பதை கண்காணிக்கும். நாம் தொடர்ந்து தேவ சித்தத்தை செய்து அவருக்கு பிரியமாய் வாழ்வோம். தாவீதைப்போல கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்றவனாக (ஏற்றவளாக) இருப்போம். ஆமென்!

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

**உள்நாட்டு வருட சந்தா** ரூ. 200/-

**வெளிநாட்டு வருட சந்தா** ரூ. 2000/-

S.PAULRAJ KENNEDY என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். ICICI வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY

ICICI வங்கி கணக்கு எண் : 0350 0150 7744

**எங்களது முகவரி** : எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா






**பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை** (மத்தேயு 7:21). இயேசுவை அறிவோம் என்று சொல்லுகிற இருவகைப்பட்ட கிறிஸ்தவர்களைப்பற்றி மத்தேயு 7-ம் அதிகாரம் சொல்லுகிறது. இந்த இரண்டில் ஒன்றை இயேசு அங்கீகரித்து, மகிழ்ச்சியும் கொள்கிறார். அடுத்த வகையை பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு தடை செய்கிறார்.

தன்னிடம் இல்லாத இயல்பை இருப்பதுபோல் பாவனை செய்கின்றவர்களின் அபாயத்தைப்பற்றி எச்சரிப்பதற்கு, இயேசு கிறிஸ்து மேற்கூறிய வசனத்தை திரளான ஜனங்களுக்கு உபதேசிக்கும்போது குறிப்பிடுகிறார். அவர்களிடம், அதைத் தொடர்ந்து வரும் வசனங்களில் ஆட்டுத்தோலை போர்த்திய ஓநாய்களைப் பற்றி எச்சரிக்கிறார். ஆட்டுத்தோலை உடுத்தியிருக்கும் பசியுள்ள ஓநாய்களைப் போன்ற கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்கிறார். இங்கே அவர் குறிப்பிடுவது, வெளிப்புறத்தில் பக்தியுள்ளவர்களைப் போலவும், கர்த்தரைச் சார்ந்தவர்கள் போலவும் காணப்படுவார்கள். ஆனால், அவர்களுக்கு உள்ளேயோ கர்த்தரோடு சரியானதொரு உறவில் இருக்க மாட்டார்கள்.

அதனால்தான் அப்போஸ்தலனாகிய பவுல், 1 தெசலோனிக்கேயர் 5:21-ல், **எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்** என்கிறார். பவுல், எல்லா விசுவாசிகளுக்கும் சொல்லுகிறார்: ஒவ்வொரு தீர்க்கதரிசனமும் வேதத்தின் வசனங்களை ஒட்டி இருக்கின்றதா என்று நீங்களே சோதித்துப் பாருங்கள். கடைசி காலங்களைப் பற்றி தீர்க்கதரிசனமாகவும் சொல்லுகிறார்: சத்தியத்தை விட்டு அநேகர் விலகி விழுந்து போவார்கள் என்று (2 தெசலோனிக்கேயர் 8-12). அந்த சமயத்தில் அநேகரை வஞ்சிக்கத்தக்கதாக அற்புதங்களும், அடையாளங்களும் பயன்படுத்தப்படும். விசுவாசிகள்



தங்களை பாதுகாத்துக் கொள்வது மிகவும் அவசியமாகும்.

ஏனெனில் கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள் (மாற்கு 13:22). எப்படி வஞ்சிக்கப்படாமல் இருப்பது? யோவான் 10:5-ல் இயேசு சொல்கிறார்: அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின் செல்லாமல், அவனை விட்டோடிப்போம் என்கிறார். யோவான் 10:27-ல், இயேசு சொல்கிறார்: என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. வஞ்சிக்கிற ஆவிகளைக் கண்டறிவதற்கான ஒரே வழி, கர்த்தருடைய சத்தத்தை அறிவதும், உணர்ந்து கொள்வதுமேயாகும். கர்த்தருடன் நெருங்கியதொரு உறவில் இருந்தால் மாத்திரமே அது சாத்தியப்படும்.

இன்றைக்கும் இந்த கள்ள விசுவாசிகளைக் கண்டறிவது கடினமான காரியமல்ல. அவர்கள் ஆடுகளுடனே கூட காணப்படுவார்கள். அவர்களது கனிகளினாலே அறியப்படுவார்கள் (கலாத்தியர் 5:22,23). ஒவ்வொரு நல்ல மரமும் நல்ல கனிகளையும், ஒவ்வொரு கெட்ட மரமும் கெட்ட கனிகளையும் உடையதாக இருக்கும். சீக்கிரத்தில் இந்த மாய்மாலக்காரர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு, அதே சமயத்தில் வெட்டப்பட்டு, அக்கினியில் எறியப்படுவார்கள் (மத்தேயு 7:19).

நாம் அறிவோம், இயேசு கிறிஸ்துவின் கால கட்டத்தில், மதத் தலைவர்களான பிரதான ஆசாரியர், சதுசேயர், பரிசேயர் எல்லாம் தங்களது மதத்தை பின்பற்றிக்கொண்டு, மேசியாவை உணர்ந்து கொள்ளாமல், அவரை பெயல்செபூல் (பிசாசுகளின் தலைவன்) என்றும் அழைத்தார்கள்.

எல்லா நிருபங்களிலும் இவைகளைக் குறித்துப் பேசியிருக்கிறான்; அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது; கல்லாதவர்களும், உறுதியில்லாதவர்களும் மற்ற வேத வாக்கியங்களைப் புரட்டுகிறது போலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள் (2 பேதுரு 3:16). கடைசி காலங்களில், ஜனங்கள் கர்த்தரைக் காட்டிலும், சுகபோகத்தை விரும்புகிறவர்களாகிவிடுவார்கள். அவர்கள் எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதை நியாயப்படுத்த வேத வசனத்தை திருப்பவும், புரட்டவும் செய்வார்கள். கர்த்தருக்கும், உலகத்துக்கும் ஊழியம் செய்ய முடியாது.

நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய



பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல் (எபேசியர் 4:14). அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு சபையினரை இவ்வாறாக உற்சாகப்படுத்துகிறார், கிறிஸ்துவை முழுமையாக அறிவதில் தங்களை தயார்படுத்துவதன் மூலம் தந்திரமுள்ள போதகர்களை எதிர்த்து நிற்க ஆயத்தமாக இருப்பதற்கு.

### ஏமாற்றுபவர்கள்மீது விரைவில் வரப்போகும் நீதி

மத்தேயு 5:45 சொல்லுகிறது, அவர் தீயோர்மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். ஆனால், இது நீண்ட காலத்துக்குத் தொடராது. மல்கியா தீர்க்கத்தரிசனம் சொல்லுகிறார்: அப்பொழுது நீங்கள் நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும், தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவனுக்கும், அவருக்கு ஊழியஞ் செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள் (மல்கியா 3:18).

ஆரம்பத்தில் கோதுமையும் பதரும் ஒன்றாக வளரும். ஆனால், அறுக்குங் காலத்தில் எரிப்பதற்காக முதலாவது பதர் சேர்க்கப்படும், பின்பு கோதுமை களஞ்சியத்தில் சேர்க்கப்படும். தனது பிள்ளைகளுடன், சபையினருடன் இருக்கும் ஏமாற்றுக்காரர்கள் பிரித்தெடுக்கப்படுவார்கள். பதர் என்பது பிசாசினால் அனுப்பப்பட்ட ஏமாற்றுகிற, தந்திர ஆவிகளாகும். இவர்களே கர்த்தருக்கு ஊழியம் செய்துகொண்டு, சதுசேயர்களைப்போல தவறான நோக்கங்களை உடையவர்கள். அவர்கள் கர்த்தரைத் தொழுது கொள்வதைவிட மதத்தை தொழுது கொள்பவர்களும் மனிதர்களை பிரியப்படுத்துகிறவர்களுமாவார்கள். அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாதபடி தடை செய்யப்படுவார்கள்.

நம்முடைய இருதயத்தின் எண்ணங்கள், நோக்கங்களின்படி கர்த்தர் நம்மை நியாயந்தீர்ப்பார். மத்தேயு 7-ல் கர்த்தர் இதைத்தான் சொல்கிறார், ஜனங்கள் அற்புதங்களைச் செய்யலாம், அவர்களது நோக்கம் சரியில்லையென்றால் அவர்கள் கர்த்தரது கோபத்திற்குள்ளாவார்கள். நாம் மனிதர்களை பிரியப்படுத்த அல்ல, கர்த்தரை பிரியப்படுத்த நாடுவோம்.

அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாகவும், வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் (எபிரெயர் 4:13).

**Form IV**

| | | |
|---|---|---|
| Place of Publication | : | A-1, Deju Plaza<br>2, South Avenue,<br>Srinagar Colony<br>Saidapet, Chennai - 600 015 |
| Periodicity | : | Monthly |
| Printer's Name | : | Jolly Peter |
| Nationality | : | Indian |
| Address | : | New No. 96, Old No. 223<br>Peters Road, Royapettah<br>Chennai - 600 014 |
| Editor's Name | : | Nija Kennedy |
| Nationality | : | Indian |
| Address | : | A-1, Deju Plaza<br>2, South Avenue,<br>Srinagar Colony<br>Saidapet, Chennai - 600 015 |
| Owner's Name | : | S. Paulraj Kennedy |

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date : 31.03.2012 Publisher S.Paulraj Kennedy




1. நமக்குள் எழும் சப்தங்கள்

### 1. மனது - Mind

நம்முடைய மனது நமக்குள் பேசும். இந்தக் காரியத்தை செய்யலாம், அந்த இடத்திற்கு பிறகு போகலாம், அந்த மனிதர் நல்ல மனிதர், இவர் நேர்மையானவர் - இப்படியெல்லாம் நாம் நினைப்பது அல்லது நமக்குள் எழும் எண்ணங்கள், அபிப்பிராயங்கள் எல்லாம் நம்முடைய மனது நம்முடன் பேசுவதாகும்.

### 2. மனசாட்சி - Conscience

நம்முடைய மனசாட்சி நமக்குள் பேசும். இந்த பிச்சைக்காரனுக்கு கைகள் இருக்கின்றது, நல்ல கண் பார்வையும், கேட்கும் திறனும் இருக்கின்றது, சரீரம்கூட நல்ல திடமாக உள்ளது, கால்கள் மாத்திரமே இல்லை, இவன் இன்னின்ன வேலைகளைச் செய்து பணம் சம்பாதிக்கலாம். ஆனால், அந்த பிச்சைக்காரனுக்கு இரண்டு கைகளுமே இல்லை, அதினால் வேலை பார்க்க முடியாது. இவனுக்குத்தான் நாம் பிச்சை கொடுக்க வேண்டும். இப்படி ஒன்றிலிருந்து மற்றொன்றை அல்லது ஒருவரிலிருந்து மற்றொருவரை பிரித்து காண்பித்து, சரியானதை காண்பித்து நம்முடன் பேசுவது நம்முடைய மனசாட்சியாகும்.

### 3. உள்ளுணர்வு - Intuition

நாம் சிந்திக்காமலே அல்லது யோசிக்காமலே நமக்குள் ஒரு எண்ணம் எழும். இதுவே உள்ளுணர்வாகும். நாம் ஒரு இடத்திற்கு போய்க் கொண்டிருப்போம். வழியில் யாரோ ஒருவர் நின்று கொண்டிருப்பார். நமக்கு அறிமுகமில்லாதவர். அவர் நம்மிடம் பிச்சை கேட்டிருக்க மாட்டார் அல்லது என்னிடமிருந்த பணத்தை இழந்துவிட்டேன், நான் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவன், என்னுடைய ஊர் போய்ச்சேர எனக்கு பண உதவி செய்யுங்கள் என்று கேட்டிருக்கவும் மாட்டார். அவரை நாம் பார்த்தவுடன் நமக்குள், இவருக்கு உதவி செய்ய வேண்டும், பணம் கொடுக்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்படும். இதுவே உள்ளுணர்வு நம்முடன் பேசுவதாகும்.

### 4. சாத்தான் பேசுவது - Satan

நம்முடைய மனதில் எண்ணங்களை, அபிப்பிராயங்களை, சிந்தனைகளைத் தந்து சாத்தான் நம்முடன் பேசுவான். அவனுடைய எண்ணங்களை நம்முடைய மனதில் தந்து, அவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவான். அடுத்தவருடைய பொருள்மேல் ஆசைப்படக்கூடாது என்ற எண்ணமுடையவர்களாய் நாம் இருப்போம். திடீரென்று அடுத்தவர்களுடைய பொருளைப் பார்க்கும்போது அல்லது அதைப்பற்றி நினைக்கும்போது, நமக்கும் அப்படிப்போல ஒரு பொருள் இருந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றும். இது தவறான எண்ணம் இல்லை. இது நம்முடைய மனது நம்முடன் பேசுவதாகும். இயேசுவையே அறியாதவர் அவர், இயேசுவை ஆண்டவராக ஏற்றுக் கொள்ளாதவர், பக்தியே இல்லாதவர், என்னுடைய பக்தி அவருடைய பக்தியைவிட மேலானது, அவர் இந்தப் பொருளை வைத்திருக்கிறார். ஆனால், இவ்வளவு பக்தியாய் இருக்கும் எனக்கு அந்தப் பொருள் இல்லையே என்ற நினைவையும், அதினிமித்தம் சோர்வையும், பொறாமையையும், சுய பச்சாதாபத்தையும் நமக்குள் உண்டாக்குவது சாத்தானாகும்.

### 5. பரிசுத்த ஆவியானவரின் சத்தம் - Holy Spirit

முந்தைய சத்தங்களெல்லாம் நம்முடையதும், சாத்தானுடையதுமாகும். ஆனால், பரிசுத்த ஆவியானவருடைய சத்தம் என்பது நம்மை உண்டாக்கின ஆண்டவருடைய சத்தம். இந்த சத்தத்தை கேட்பதே தியானிப்பதாகும். பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தை எல்லோரும் கேட்க முடியுமா? என்று கேட்டால், கேட்கலாம் என்பதே பதிலாகும். ஆனால், அதற்கு தியானம் அவசியம். முதலாவதும் பிரதானமானதுமான காரியம், நாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றிருக்க வேண்டும். அதற்கு ஒப்பான மற்றொரு காரியம், வேதத்தை நன்கு படிக்க வேண்டும்.

நமக்குள் பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் நாம் எப்படி அவருடைய சத்தத்தைக் கேட்க முடியும்? வேதத்தில் லூக்கா 11-ம் அதிகாரத்தில் கேளுங்கள் கொடுக்கப்படும், பரிசுத்த ஆவியை கேட்டு பெற்றுக் கொள்ளுங்கள் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். அதற்கு முதலாவது நாம் பாவங்களை கர்த்தரிடம் அறிக்கை செய்து (பொத்தாம் பொதுவாகவோ, மேலோட்டமாகவோ, அங்கொன்றும் இங்கொன்றுமாகவோ சொல்வது அல்ல. முதலிலிருந்து முடிவு வரை, ஒன்று விடாமல், விரிவாக, விளக்கமாக) செய்த பாவங்களுக்காக அவரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். நம்முடைய மனசாட்சி, கல்வாரி சிலுவையில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிந்தின விலையேறப்பெற்ற இரத்தத்தினால் கழுவப்பட வேண்டும். பாவங்கள் செய்ததினால், நம்முடைய மனசாட்சி குற்றமுள்ள, அசுத்த மனசாட்சியாய் இருக்கின்றது.இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே அதை கழுவி சுத்திகரிக்க முடியும். என்னுடைய பாவங்களை மன்னியும். உம்முடைய இரத்தத்தினால் என்னை கழுவி சுத்திகரியும் என்று நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நோக்கி கெஞ்சித்து பிரார்த்திக்கும்போது, அவருடைய இரத்தம் நம்முடைய குற்ற மனசாட்சியைக் கழுவி சுத்திகரித்து, சுத்த மனசாட்சியாக்கும். மெய்யான சமாதானம் நமக்குள் உண்டாகும். தேவ அன்பினால் நிரப்பப்படுவோம். இதுதான் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்பது. பரிசுத்த ஆவி நம்முடைய இருதயத்தில் ஊற்றப்படும் (ரோமர் 5:5). அதன் (அபிஷேகத்தின்) அடையாளம், நாம் அறியாத அந்நிய மொழிகளைப் பேசுவதாகும்.

இப்போது நாம் வேதத்தை கையில் எடுக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர், வேதத்தின் வார்த்தையைக்கொண்டே நம்முடன் பேசுவார். வேதத்தின் வார்த்தையை நாம் இரவும்,பகலும் நேரம் கிடைக்கும்போதெல்லாம் படிக்கவேண்டும். இது மிக மிக முக்கியம், அவசியம்.

- தொடரும்.